அறிவிப்பு

மாநில நலவாழ்வு சங்கம், தமிழ்நாடு
மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை

தேசிய நலவாழ்வுக் குழுமம் – தமிழ்நாடு (NHM – TN), சிவகங்கை மாவட்ட நலவாழ்வுச் சங்கம் மூலம், இயக்குநர்–மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரப் பணிகள் கட்டுப்பாட்டில் உள்ள விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்களில், தேசிய நலவாழ்வுக் குழும விதிமுறைகளின்படி, ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக செவிலியர் (Staff Nurse) பணியிடங்களில் பணிபுரிய தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்காணும் மாவட்ட நலவாழ்வுச் சங்க அலுவலகத்திற்கு 04.12.2026 அன்று மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டும்.

வ. எண்	பதவியின் பெயர்	மாவட்டத்தில் உள்ள மொத்த காலியிடங்கள்	மாத ஊதியம்	வயது	தகுதி
1.	செவிலியர் (Staff Nurse) – ஒப்பந்த அடிப்படையில்	15	ரூ.21,000/–	50 வயது வரை	செவிலியர் பட்டய படிப்பு (GNM) அல்லது இளங்கலை செவிலியர் பட்டம் (B.Sc Nursing) – அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் செவிலியர் கல்லூரி – மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டது. தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் பதிவு கட்டாயம்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர், மாவட்ட நலவாழ்வுச் சங்கம் / மாவட்ட சுகாதார அலுவலர்,
முதன்மை கல்வி அலுவலக மேல்தளம்,
சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம்,
சிவகங்கை – 630562.
தொலைபேசி எண்: 04575–240524.

குறிப்பு:

1. விண்ணப்ப படிவம் / அறிவிப்பு / அரசு ஆணை விபரம் சிவகங்கை மாவட்ட வலைதளம் (http:/sivaganga.nic.in) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தகுந்த ஆவண நகல்களுடன் மேலே குறிப்பிட்ட மாவட்ட நலவாழ்வுச் சங்க அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ 04.12.2026 அன்று மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
3. இப்பணி முற்றிலும் தற்காலிகமான ஒப்பந்த அடிப்படையிலானவை, பணி நிரந்தரம் கோர எவ்வித உரிமையும் இல்லை. தேர்வு செய்யப்படுபவர்கள் அரசாணை எண்.427 மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை நாள்.18.11.2026 ன்படி பணியமர்த்தப்படுவார்கள்.

செயலாளர்,
மாவட்ட நலவாழ்வுச் சங்கம்/
மாவட்ட சுகாதார அலுவலர்,
சிவகங்கை

தலைவர்,
மாவட்ட நலவாழ்வுச் சங்கம்/
மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை